பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 07 ஞாயிற்றுக்கிழமை 22.12.2024 | அதிர்வு 143

## முதலை கடித்து பெண் மரணம்!

### வவுனியாவில் துயரம்

வவுனியா, உளுக்குளம் – பாவற்குளம் பகுதியில் முதலை கடித்துப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### எங்கள் நிலத்தை விடுவிக்காவிடின்

# காணி உறுதியுடன் உள்ளே வருவோம்!

## ஆக்கிரமிப்புப் படைகளுக்குத் தையிட்டி மக்கள் எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

“யாழ்ப்பாணம், தையிட்டி பகுதியில் ஆக்கிரமிக்கப்பட்டு இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லையேல் காணி உறுதிகளுடன் நாங்கள் உள்ளே நுழைவோம்.” – இவ்வாறு தையிட்டியைச் சேர்ந்த காணி உரிமையாளரான சுகமாரி சாருஜன் தெரிவித்தார்.

காணி உரிமைக்கான மக்கள் கூட்டணியின் வட பிராந்திய சந்திப்பு யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் நடைபெற்றது. அதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யுத்தம் மௌனிக்கப்பட்டு 15 வருடங்கள் ஆகியும் இன்னமும் காணிகள் விடுவிக்கப்படவில்லை. கடந்த ஆட்சி காலங்களில் பல்வேறு வகையான போராட்டங்கள் ஈடுபட்டும், 02

### இரண்டு வருடங்களுக்கு முன்

## பிரபாகரனின் பிறந்த தினத்துக்குப் பேஸ்புக்கில் வாழ்த்துத் தெரிவித்தவரிடம் ரி.ஐ.டி. விசாரணை

(கி.வசந்தன்)

இரண்டு வருடங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினத்துக்குச் சமூக வலைத்தளத்தில் (பேஸ்புக்கில்) வாழ்த்துத் தெரிவித்தவரிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் (ரி.ஐ.டி.) விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் விடுதலைப்புலிகளின் 02



# நெடுந்தீவில் இருந்து இறைச்சியுடன் வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது!



யாழ்ப்பாணம், நெடுந்தீவு பிரதேசத்தில் இருந்து குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு இறைச்சியுடன் வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை இளைஞர்கள் கடற்படையினரின் உதவியுடன் மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நெடுந்தீவுப் பகுதியில் இளைஞர் ஒருவர் வளர்த்து வந்த ஆடு ஒன்று காணாமல்போயுள்ளது.

இந்நிலையில், நேற்று சனிக்கிழமை விடுமுறையில் வீடு செல்வதற்காக நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்குப் படகில் வந்து இறங்கிய வேளையில், அவரது கையில் சந்தேகத்துக்கிடமான முறையில் ரெஜிபோம் பெட்டி காணப்பட்டது.

அது தொடர்பில் படகில் வந்த இளைஞர்கள் கடற்படையினருக்குத் தகவல் வழங்கி அந்தப் பெட்டியைச் சோதனை செய்தபோது, அதற்கு ஒரு தொகை இறைச்சி காணப்பட்டது.

நெடுந்தீவில் காணாமல்போன ஆட்டை இறைச்சியாக்கிப் பொலிஸ் உத்தியோகத்தர் எடுத்துச் செல்வதாக இளைஞர்கள் குற்றஞ்சாட்டினர்.

அதனால் மீட்கப்பட்ட இறைச்சியையும், பொலிஸ் உத்தியோகத்தரையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்துறைப் பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

மீட்கப்பட்ட இறைச்சி, ஆட்டிறைச்சியா என்பதைக் கண்டறிந்த பின்னரே மேலதிக நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### முதலை கடித்து....

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் 67 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

மேற்படி பெண் கால்நடைகளுடன் சென்றபோது கால்வாயில் முதலை கடித்து உயிரிழந்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் உளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### பிரபாகரனின்...

தலைவர் பிரபாகரனின் பிறந்த தினத்தன்று சமூக வலைத்தளம் ஒன்றில் அவருடைய படத்தைப் பிரசுரித்து பிறந்த தின வாழ்த்து நபர் ஒருவரால் போடப்பட்டிருந்தது.

பிரபாகரனின் படத்துக்குக் கீழ் அந்த நபரின் சமூக வலைத்தளத்தின் நட்பு வட்டத்தில் இருந்த சிலர் பிறந்த தின வாழ்த்துக்களைப் பதிவு செய்திருந்தனர்.

இவ்வாறு பிறந்த தின வாழ்த்துக்களைப் பதிவு செய்த வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவரிடமே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் வவுனியா அலுவலகத்தில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### காணி உறுதியுடன்...

மகஜர்களைக் கொடுத்தும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை.

தற்போது வந்துள்ள ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து நாங்கள் மீண்டும் இதனை வலியுறுத்த வேண்டும் என எதிர்பார்த்துள்ளோம்.

முப்படையினரின் அபகரிப்புக்கு அடுத்தபடியாக மதத்தின் பெயராலும் காணி அபகரிக்கப்பட்டுள்ளது.

தனியாருக்குச் சொந்தமான 150 பரப்புக் காணியை ஆக்கிரமித்து, மொரட்டுவ பல்கலைக்கழக கட்டடக்கலை நிபுணர் ஒருவர் பௌத்த தூபி ஒன்றை நிறுவியுள்ளார்.

பாதிக்கப்பட்ட நாம் போராட்டங்களை நடத்தினோம். ஆனால், முப்படைப் பாதுகாப்புடன் அங்கு பூஜைகள் நடக்கின்றன.

மிக விரைவாக எங்களுடைய காணிகள் எங்களுக்கு வேண்டும்.

நாட்டினுடைய பொருளாதாரத்தில் விவசாயம், கடற்றொழில் ஊடாக மிகப் பெரும் பங்காற்றிய வலிகாமம் வடக்கு மண்ணை ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்தால், மக்கள் மீண்டும் பழைய நிலைக்கு வருவார்கள்.

காணிகளை மீட்பதற்காக எந்த நிலைக்கும் கீழிறங்க நாங்கள் தயாராக உள்ளோம். தீர்வு கிடைக்காவிட்டால் காணி உறுதிகளுடன் காணிகளுக்குள் நுழைவோம். எம்மோடு அனைத்துத் தரப்பினரும் வரவேண்டும்." – என்றார்.








### ”வல்வெட்டித்துறை எனும் ஊர் நடுவில் வந்ததால் வஞ்சிக்கப்பட்டதா?”

# பருத்தித்துறை - பொன்னாலை வீதியை புனரமைக்கக் கோரி போராட்டம் ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பருத்தித்துறை - பொன்னாலை வீதியைப் புனரமைக்கக் கோரி வல்வெட்டித்துறையில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது, கடல் அரிப்புக்கு உட்பட்டு வரும் சுமார் 12.8 கிலோமீற்றர் நீளமான வீதியைப் புனரமைக்கக் கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இதில் அதிகளவான மக்கள் கலந்து கொண்டு தமது கையொப்பத்தை இட்டுச் செல்கின்றனர்.

இதன்போது, ”எமது வீதி எமக்கானது”, “புதிய அரசே புது வீதி அமைத்து தா?”, ”ஓட்டுக்காக வீடு வந்தவரே வந்த வீதியை மறந்தது ஏன்?”, ”வல்வெட்டித் துறை எனும் ஊர் நடுவில் வந்ததால் வஞ்சிக்கப்பட்டதா?”, ”தலைவன் பிறந்த ஊர் என்பதால் நிராகரிக்கப்பட்டதா?” உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளைத் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.





# வவுனியாவில் அதிக பனிமூட்டம்

## வாகனச் சாரதிகள் பெரும் சிரமம்



(கி.வசந்தன்)

வவுனியாவில் அண்மைய நாட்களை விடவும் இன்று சற்று அதிக பனி மூட்டமாகக் காணப்பட்டது.

கடும் பனிமூட்டம் காரணமாகப் போக்குவரத்தை மேற்கொள்வதில் வாகனச் சாரதிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக ஏ - 9 வீதி மற்றும் மன்னார் வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் ஒளியைப் பாய்ச்சியபடி சென்றமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.








# வவுனியாவில் விபச்சாரத்தில் ஈடுபட்ட 3 பெண்கள் சிக்கினர்

(கி.வசந்தன்)

வவுனியாவில் விபச்சாரத்தில் ஈடுபட்ட 3 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மாவட்ட மது ஒழிப்புப் பிரிவு பொலிஸார் இன்று தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மாவட்ட மது ஒழிப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மாவட்ட மது ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி கஜேந்திரன் தலைமையில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது தேக்கவத்தை பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் விபச்சாரத்தில் ஈடுபட்ட 3 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 20 - 30 வயதுக்கு உட்பட்டவர்களாவர். அவர்கள் சுந்தரபுரம், குழுமாட்டு சந்தி, கல்மடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

மேலதிக விசாரணைகளின் பின் அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

# Gunams super market super deal

**20, 21, 22/12/2024**

100$ க்கு மேல் கொள்வனவு செய்து 10lb Kushbu basmathi rice bag யை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்




1139 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நம்பிக்கை தரா நகர்வுகள்

புதிய ஜனாதிபதி பதவியேற்று மூன்று மாதங்கள் கடந்து விட்டன.

அது போலவே நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து, புதிய அரசு தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்து வாரங்களாகிவிட்டன.

மிக வலிமையான நாடாளுமன்றப் பலத்துடன் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவின் ஆரம்ப நகர்வுகள், முதல் நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை தருவனவாக அமையவில்லை. அதனையே தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குதல், புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துதல் என்பவற்றுக்கான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுப்பதில் அரசு பின்வாங்குவது போல் தென்படுகின்றது என்று அவர்கள் நோர்வே நாட்டுத் தூதுவர் மே-எலின் ஸ்ரெனரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கான நோர்வே தூதுவர் மே-எலின் ஸ்ரெனருக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் எம்.பி. ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. அப்போதே இந்தக் கருத்து நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

புதிய அரசு ஆட்சிப்பீடமேறி சில வாரங்களே கடந்திருப்பதனால், அரசினது நடவடிக்கைகள் தொடர்பில் உடனடியாக ஒரு மதிப்பீட்டுக்கு வருவது கடினம் என நோர்வே தூதுவரிடம் சுட்டிக்காட்டிய அவர்கள், எனவே அரசுத் தரப்பின் நகர்வுகள் குறித்து தொடர்ந்து அவதானம் செலுத்தி வருகின்றனர் எனவும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

அது சரியான நிலைப்பாடுதான். ஆயினும், இவ்விவகாரங்களில் - குறிப்பாக சிறுபான்மையினருக்கு நம்பிக்கை தரும் கருத்து வெளிப்பாடுகளை தருவதில் - ஒரு குழப்பமான பிசிறல் தன்மையே ஆட்சித் தரப்பிடமிருந்து வெளிப்பட்டு வருகின்றமை கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது.

நிலுவையில் உள்ள உள்ளூராட்சித் தேர்தலை, ஏற்றுக்கொள்ளப்பட்ட பழைய வேட்புமனுக்களை தள்ளுபடி செய்து, புதிய வேட்புமனுக்களின் அடிப்படையில் நடத்துவதற்கு திட்டமிட்டிருப்பதாகக் கூறும் அரசு, சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் அத்தேர்தல் நடக்கும் என்று உறுதி கூறுகின்றது. ஆனால், அப்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களை நிராகரிக்கும் சட்ட மூலம் புத்தாண்டில் கூடும் முதல் நாடாளுமன்ற அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே வாக்குறுதி அளித்தபடி சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் அத்தேர்தலை நடத்தக்கூடியதாக இருக்கும்.

முன்னர் வாக்குறுதி அளிக்கப்பட்டதைப் போன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் இன்னமும் முழுமையாக விடுதலை செய்யப்படவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கைவிடும் போக்கும் தென்படவில்லை.

மாகாணசபைத் தேர்தல் குறித்தும் வாக்குறுதிகள் புதிதாகக் கூறப்பட்டாலும் அத்தேர்தல் சட்டத்துக்காக தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் என்ற புதிய கதை இப்போது அவிழ்த்து விடப்படுகின்றது. பழைய தேர்தல் முறைமையைக் கைவிட்டு, தேர்தல் சீர்திருத்த ஏற்பாடுகளுடன்தான் அந்தத் தேர்தல் என்றால் அது இப்போது நடக்கும் காரியமில்லை என்பது உறுதி.

மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் இப்படி இழுபட விட்டால், 13 ஆம் திருத்தத்தின் முழு நடைமுறையாக்கமும் இழுபட்டுப் போகும் வசதி உண்டென புதிய ஆட்சிப் பீடம் கருதுகின்றதோ என்ற சந்தேகமும் தமிழர் தரப்பில் உள்ளது.

இவையெல்லாம் இந்த ஆட்சித் தரப்புக் குறித்துத் தமிழர்களுக்கு நம்பிக்கை தருவனவாக இல்லை என்பதுதான் நிலைமை.




# எலிக் காய்ச்சல் தொடர்பில் விழிப்புணர்வு நடைபவனி

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி நிகழ்வு இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸடீனின் ஆலோசனைக் அமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தலைமையில் இந்த விழிப்புணர்வு நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

இதில் எலிக் காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வுத் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. இதன் போது சாய்ந்தமருது குடாக்கரை மேற்கு விவசாயிகள் சங்கத்தின் உறுப்பினர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.







# அம்பாறையில் வெள்ள நிவாரணம்

**(வி.ரி.சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனித அபிவிருத்தி தாபனம் உலருணவுப் பொருள்களை வழங்கியுள்ளது.

பெல்ஜிய நிறுவனம் ஒன்றின் ஒத்துழைப்போடு, மனித அபிவிருத்தி தாபனத்தின் பெண்கள் ஒத்துழைப்பு முன்னணி இவற்றை வழங்கி வைத்தது.

மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் வடகிழக்கு மாகாண இணைப்பாளர் பி.ஸ்ரீகாந்த் முன்னிலையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

உதவி இணைப்பாளர் எம்.ஐ.றியாலும் நிகழ்வில் கலந்து கொண்டார்.



# ஏறாவூர் பிரதேச வீதிகளை புனரமைக்குமாறு கோரிக்கை

## மாகாண சபைகள் உள்ளூராட்சி பிரதி அமைச்சரிடம் முன்னாள் அமைச்சர் சுபைர்

**(ஏ.எல்.றியாஸ்)**

ஏறாவூர் பிரதேசத்தில் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் மிகவும் மோசமான நிலையில் உள்ள வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர் மாகாண சபைகள் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் றுவான் செனரத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாகாண சபைகள் உள்ளூராட்சி பிரதி அமைச்சரை அமைச்சில் அண்மையில் சந்தித்தபோதே முன்னாள் அமைச்சர் சுபைர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேசம் கடந்த வெள்ள அனர்த்தத்தின்போது முற்றாகப் பாதிக்கப்பட்டது.

மழை காலங்களில் ஏறாவூர் பிரதேசத்தின் பல வீதிகள் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. இந்த வீதிகளால் பயணிக்கும் பாடசாலை மாணவர்களும், பொது மக்களும் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர் என்று முன்னாள் அமைச்சர் சுபைர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

எனவே ஏறாவூர் பிரதேச மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மிகவும் மோசமான நிலையில் உள்ள வீதிகளை புனரமைப்பதுடன் சில வீதிகளில் வடிகான் வசதிகளையும் ஏற்படுத்தி தருமாறு முன்னாள் அமைச்சர் சுபைர் மாகாண சபைகள் உள்ளூராட்சி பிரதி அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார்.

இந்த விடயத்தைக் கருத்தில் கொண்ட பிரதி அமைச்சர் எதிர்வரும் காலங்களில் அவற்றுக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருவார் என்று உறுதியளித்தார்.



# மலேசியாவில் தூர நோக்குடைய தலைவர் விருது; இலங்கையில் அதிபர் முஹம்மட் அன்சார் தெரிவு!

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

ஹெல்ப் பல்கலைக் கழகத்தின் அனுசரணையில் மலேசியாவில் எதிர்வரும் ஜனவரி 18 ஆம் திகதி தூர நோக்குடைய தலைவர் விருது வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கையராக மருதமுனையை சேர்ந்த அதிபர் அலியார் முஹம்மட் அன்ஸார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தரவுகள், வினாக்கள், விளக்கங்கள் என்பவற்றின் அடிப்படையில் இணையவழியில் தெரிவு செய்யப்பட்ட உலகின் 48 நாடுகளின் பிரதிநிதிகளில் ஒருவராக இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட புலவர்மணி சரிபுத்தீன் மகா வித்தியாலயத்தின் அதிபரான முஹம்மட் அன்ஸார், 1992இல் இலங்கை ஆசிரியர் சேவையில் இணைந்து கொண்டார். 1995இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பகுதிநேர அறிவிப்பாளராகவும் தெரிவானார். 2012 முதல் இலங்கை அதிபர் சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

இவர், கல்விமாணிப் பட்டத்தோடு பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா, மனிதவள அபிவிருத்தி முகாமைத்துவ டிப்ளோமா பட்டங்களையும் பெற்றுள்ளார்.

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் பிரதி அதிபராகவும் சாய்ந்தமருது ரியாழுல் ஜன்னா வித்தியாலயத்தின் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.



அவர் கடமையாற்றிய பாடசாலைகளை வலயத்தில் பேசும் முதல் நிலைப் பாடசாலைகளாக மாற்றி கல்விச் சமூகத்தின் நன்மதிப்பை பெற்றவராவார்.

மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர், அலியார் - றாகிலும்மா தம்பதிகளின் புதல்வராவார்.



# பெரிய நீலாவணை கலாசார மண்டபத்தை மக்கள் பாவனைக்குக் கையளிக்க ஏற்பாடு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையால் பெரிய நீலாவணையில் அமைக்கப்பட்டுள்ள பல்தேவை கலாசார மண்டபம் விரைவில் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட வுள்ளது.

இதன் நிர்மாணப் பணிகள் பூர்த்தி யடைந்துள்ள நிலையில் கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ், அதிகாரிகள் சகிதம் நேற்று புதன்கிழமை அங்கு விஜயம் செய்து, மண்டபத்தை திறப்பு விழா செய் வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

இதன்போது கல்முனை மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜெளஸி, கணக்காளர் வை. ஹபீபுல் லாஹ், வேலைகள் அத்தியட்சகர் பி.றி. எம். நஹீம், தொழில்நுட்ப உத்தி யோகத்தர் எம். சுகுமார் உள்ளிட்டோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ் நவீன வசதிகளுடன் இரு மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியாக அமைக் கப்பட்டுள்ளது.

இந்தக் கலாசார மண்டபத்தில் மாநாடுகள், கூட்டங்கள், கலை, கலாசார விழாக்கள் மற்றும் பொது மக்களின் திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கும் ஏற்றவாறு குறைந்த சேவைக் கட்ட ணத்தில் பண்டப அனுமதியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலாசார மண்டபத்தை கிழக்கு மாகாண ஆளுநர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விரைவில் திறந்து வைக்கவுள்ளார் என தெரி விக்கப்படுகிறது.



# மழையை நம்பிய நெற்செய்கை தோப்பூர் பிரதேசத்தில் வெற்றி!

## மானியம் கிடைக்கவில்லை என்று விவசாயிகள் கவலை

(எம்.எம்.நௌபீக்)

தோப்பூர் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் இந்த முறை மேற்கொள்ளப்பட்ட மழையை நம்பிய நெற்செய்கை சிறப்பான முறையில் வெற்றியளித்துள்ளது என்று விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

நெற்செய்கைக்கு புதிய அரசால் வழங்குவதாக வாக்களித்த ஹெக்ரெயருக்கு 25 ஆயிரம் ரூபா மானியம் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை.

இதனால் கடன் அடிப்படையிலேயே உரம் மற்றும் கிருமிநாசினிகள் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. இதனால் கடை உரிமையாளர்கள் கழிவுத் தொகையின்றி இந்தப் பொருள்களை தருகின்றனர் என்றும் இதனால் தாம் பாதிப்படைவதாகவும் விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.




# சுகாதாரமான ஆரோக்கிய முறையில் புத்தளத்தில் சத்துணவு தயாரிப்பு பயிற்சி

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ் )

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் புத்தளம் கிளை அதன் இளந்தளிர் செயற்றிட்டத்தின் ஊடாகச் செயற்படுத்தி வரும் சஞ்சீவி உணவுப் பயிற்சிகள் புத்தளம் கிராமிய அபிவிருத்தி நிலையத்திலும் மற்றும் உணவு விளக்கக் கண்காட்சி வண்ணாத்தவில்லு பிரதேச சபையின் கூட்ட மண்டபத்திலும் இடம்பெற்றன.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் அதன் இளந்தளிர் வேலை திட்டத்தை புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் பிரதேச செயலக பிரிவு மற்றும் வண்ணாத்தவில்லு பிரதேச செயலக பிரிவுகளில் கே.என்.எச். நிறுவனத்தின் அனுசரணையுடன் செயற்படுத்தி வருகின்றது.

நாட்டில் இன்று மந்த போசனை பிள்ளைகள் அதிகரித்துள்ளனர். இந்த நிலையைப் போக்கிப் போஷாக்கான சத்துணவுகளை சுகாதார முறைப்படி குறைந்த செலவுகளில் தமது வீடுகளிலேயே எவ்வாறு உற்பத்தி செய்வது போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அவ்வாறான உணவு வகைகளும் இளந்தளிர் செயற்றிட்டத்தில் புத்தளம் மாவட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள குடும்பத் தலைவிகளைக் கொண்டு சமைக்கப்பட்டு அவைகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

செயற்கை கலவைகள், இரசாயன பதார்த்தங்கள் பயன்படுத்தப்படாத சுகாதாரமான ஆரோக்கிய சத்துணவு தயாரிப்பு தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

கொழும்பைச் சேர்ந்த உணவு தொழில்நுட்ப பிரிவின் முன்னாள் சிரேஷ்ட துணை இயக்குநர் டாக்டர் ஜானகியால் பயிற்சிகள் வழங்கி வைக்கப்பட்டன.




# பட்டிருப்பு வலயச் சாதனையாளர் செட்டிபாளையத்தில் கௌரவிப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

கல்வியில் சாதனைபடைத்த மாணவர்கள் பாராட்டு மற்றும் சாரளம் சஞ்சிகை வெளியீட்டு விழா பட்டிருப்பு வலயத்தின் ஏற்பாட்டில் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் தலைமையில் செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் வ.கனகசிங்கம் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக கிழக்கு மாகாண காணி ஆணையாளர் என்.விமல்ராஜ், டாக்டர் வாசுதேவன், சட்டத்தரணி கே.கிருபாகரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், கல்வி சார உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இங்கு பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண பரீட்சை, க.பொ.த உயர் தரப் பரீட்சை மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் மாகாண, தேசிய ரீதியில் சாதனை படைத்த மாணவர்கள் பதக்கம், நினைவுச் சின்னம், சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பட்டிருப்பு கல்வி வலயத்தின் 2024 ஆம் ஆண்டுக்கு உரிய சாரளம் சஞ்சிகையின் முதற் பிரதியை வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கத்துக்கு வழங்கிவைத்தார்.

இந்தப் பாராட்டு விழாவில் 350 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். வலயக்கல்வி பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் எனப்பலரும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.



# கிழக்கு மாகாண இலக்கிய விழா 2025 இற்கு விண்ணப்பம் கோரல்

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2025 ஆம் ஆண்டுக்கான மாகாண இலக்கிய விழாவில் போட்டிகளை நடத்தி விருது வழங்கிக் கௌரவிப்பதற்குத் தீர்மானித்துள்ளது என மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவண முத்து நவநீதன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளிகளை இனங்கண்டு அவர்களை பாராட்டி கௌரவிப்பதன் மூலம், அவர்களது கலை இலக்கியப் பணிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதுடன், எதிர்கால சந்ததியினருக்கு படைப்புலக முன்டோடிகளாக அவர்களை இனங்காட்டுவதனை நோக்கமாகக் கொண்டதாக இந்த விழா அமையும்.

இலக்கிய படைப்புகளுக்கான 'சாகித்தியவிருது' வழங்கப்படவுள்ளது. அத்துடன் கிழக்கு மாகாணத்தின் கலை இலக்கிய வளர்ச்சிக்காக காத்திரமான பங்களிப்புக்களை ஆற்றிய, ஆற்றி வருகின்ற மூத்த கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவித்து 'வித்தகர்' விருது வழங்கப்படவுள்ளது.



அவர்களில் விருது அல்லது கௌரவம் வழங்கும் துறைகள் - இலக்கிய வித்தகர், நாட்டாரியல் வித்தகர், ஊடகவித்தகர், நுண்கலை வித்தகர், ஆற்றுகை வித்தகர், பல்துறை வித்தகர் போன்ற விருதுகள் வழங்கப்படவுள்ளன.

கிழக்கு மாகாண 'இளங் கலைஞர் விருது' கலை இலக்கியத்துறையில் சாதனை படைத்த, படைத்து வருகின்ற இளங்கலைஞர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

அவர்களில் விருது அல்லது கௌரவம் வழங்கும் துறைகள் - இலக்கியம், நாட்டாரியல், ஊடகம், நுண்கலை, ஆற்றுகை பொன்றவற்றுக்கு வழங்கப்படவுள்ளன.

கிழக்குமாகாணபண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் 'கிழக்கு மாகாண எழுத்தாளர்களின் நூல்களை கொள்வனவு செய்யும் திட்டமானது' இந்த வருடமும் இடம்பெறவுள்ளது.

நூலுருவாக்கம் - 2025 - கிழக்கு மாகாண படைப்பாளிகளின் ஆக்கங்களை (கையெழுத்துப்பிரதிகள்) நூல் வடிவில் வெளியீடு செய்வதற்கு இவ்வருடமும் எமது திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் தகுதியானவர்கள் பின்வரும் துறைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

ஏற்கனவே 'வித்தகர்' மற்றும்' இளங் கலைஞர்' விருது பெற்றவர்கள் மீண்டும் அதே விருதுகளுக்கு விண்ணப்பிக்க முடியாது.

விண்ணப்பப்படிவங்களை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திலும், கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம் என்று மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் மேலும் தெரிவித்தார்.

# கட்டாய நிபந்தனைக் காலத்தை பூர்த்திசெய்த ஆசிரியர்கள் இடமாற்றப் பட்டியலுக்குள் இல்லை!

## அநீதியானது என்கிறார் அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் லோகநாதன்

(எஸ்.அஷ்ரப்கான்)

கிழக்கு மாகாண வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்துக்குள் கட்டாய நிபந்தனைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் உள்வாங்கப்படாமை அநீதியானது என்று அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

இந்த இடமாற்றப் பிரச்சினை தொடர்பாக அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் கல்முனையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்ற கொள்கைத் திட்டத்துக்கு அமைவாக வருடம் தோறும் பாடரீதியான ஆசிரியர் தேவையான வலயங்களில் உள்ள பாடசாலைகளுக்கு வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தின் மூலமாக ஆசிரியர்கள் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் பதிலீட்டின் அடிப்படையில் "இரண்டு வருடம் கட்டாய நிபந்தனைக் காலம் குறிப்பிட்டு" இடமாற்றம் செய்யப்பட்டு வந்துள்ளனர்.

இக்காலத்தை பூர்த்தி செய்தவுடன் அவ்வாசிரியர்களுக்கு அவர்களுடைய முன்னைய வலயங்களுக்கு வருடாந்த




ஆசிரியர் இடமாற்றத்தின் மூலமாக இடமாற்றம் வழங்கப்பட்டு வந்துள்ளதை சகலரும் அறிவர்.

இதன் அடிப்படையில் முன்னாள் கல்விப் பணிப்பாளரினால் "வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்கள் 2021 (பதிலீடு தமிழ்மொழி மூலம்)" என்று தலைப்பிட்டும், வழங்கப்பட்ட இடமாற்றக் கடிதத்திற்கு அமைவாக இடமாற்றம் வழங்கப்படுகிறது என்று குறிப்பிட்டுக் காட்டப்பட்டதற்கு அமைவாக, கடமையேற்று "இரண்டு வருட கட்டாய நிபந்தனைக் காலத்தை பூர்த்தி செய்த" ஆசிரியர்களுக்கு இதுவரை இடமாற்றம் வழங்கப்படாமை அநீதியானது.

மேலும், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரது "வலயங்களுக்கிடையிலான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் 2025" என்று தலைப்பிட்ட கடிதத்தில் வலய இடமாற்ற அதிகாரியால் தீர்மானிக்கப்படுகின்ற உச்ச பட்ச சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டமைக்கு அமைவாக இரண்டு வருட கட்டாய நிபந்தனைக் காலத்தை பூர்த்தி செய்த சுமார் 30 பேர் வரையான ஆசிரியர்களும் விண்ணப்பித்துள்ளனர்.

இவ் ஆசிரியர்கள் பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை மற்றும் ஏனைய பிரதேசங்களிலும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச பாடசாலைகளிலும் கடமை புரிகின்றனர்.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் "வருடாந்த ஆசிரியர் இடமாற்றம்-2025 முன்மொழிவு என்று தலைப்பிட்டு வெளியிடப்பட்ட பெயர்ப்பட்டியலில் கட்டாய நிபந்தனைக் காலத்தை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் உள்வாங்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய அரசு நீதியான, நேர்மையான நிர்வாக செயற்பாட்டை விரும்புகின்ற அரசாக இருப்பதால் கட்டாய நிபந்தனைக் காலத்தை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் தொடர்பில் தாங்கள் பொருத்தமான நீதியான நடவடிக்கையை உரியவர்கள் எடுக்க வேண்டும்.

இந்த ஆசிரியர்களின் பிரச்சினை தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநருக்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்று தெரிவித்துள்ளார்.



# யாழ். பொருளாதார மத்திய நிலையத்தை இயக்க வைப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்

## இயற்கை நண்பர்கள் இயக்கம் கோரிக்கை

(த.சுபேசன்)

தென்மராட்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தை உடனடியாக இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இயற்கை நண்பர்கள் இயக்கம் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு,

பொருளாதார மத்திய நிலையங்கள் முழுமையாக சந்தைப்படுத்தல் வர்த்தக நோக்கங்களைக் கொண்டவை. ஆனாலும் அவை மொத்த சில்லறை வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டவை, உற்பத்திப் பிரதேசங்களை மையமாகக் கொண்டவை, சில்லறை வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டவை என்ற வகையில்தான் யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையம் உள்ளது.

யாழ்ப்பாணம் விவசாயிகள் தமது உற்பத்திகளைத் தகுந்த விலையில் விற்பனை செய்வதற்கும், நுகர்வோர் குறைந்த விலையில் மரக்கறிகள், பழங்களைக் கொள்வனவு செய்வதற்குமான வசதிகளை உருவாக்கும் நோக்கில் 20 வர்த்தக நிலையங்களை உள்ளடக்கி 200 மில்லியன் ரூபா செலவில் தென்மராட்சியின் மட்டுவிலில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையம் 2022 இல் திறக்கப்பட்டது.

இந்த யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தை இயங்க வைப்பதன் மூலம் அதிக நன்மை பெறப் போகின்றவர்கள் தமது கடின உழைப்பின் மூலம் விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள்தான்.

குறிப்பாகப் போட்டிகரமான நிலைமையின் மூலம் வினைத்திறன் மிக்க விலைப் பொறிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கும் இயலுமாகும் வகையில் சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குபடுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை பேன்ற உணவு உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளின் சந்தைப் படுத்தலை இலகுபடுத்த வேண்டுமானால் பொருளாதார மத்திய நிலையம் உடனடியாக இயங்கு நிலைக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

தற்போது நடைமுறையில் உள்ள மொத்தக் காய்கறி கொள்முதலாளர்கள் சர்வாதிகாரப் போக்கோடு செயற்படுகின்றனர் எனவும், 10 வீதம் என்ற தரகுப் பணத்தைப் பெறும் நிலை காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சிலவேளைகளில் பொருள்கள் விற்பனை செய்யப்படவில்லை என விவசாயிகளிடம் பணம் வழங்கப்படாத நிகழ்வுகளும் சம்பவிக்கின்றன என்றும் விவசாயிகள் பெரும் குறைப்படுகின்றனர். பகிரங்க கேள்வி கோரலுக்கு உட்ப டுத்துகின்ற போது விவசாயிகளின் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கும்.

எனவே யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யும் பொருள்களில் உள்ளூர் தேவைகள் போக எஞ்சியவற்றை தென்பகுதி நுகர்வோருக்கு விற்பனை செய்ய முடியும்.

ஏற்றுமதி பொருள்களை நவீன களஞ்சிய வசதிகளுடன் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யவும், யாழ்ப்பாண நுகர்வோருக்கு தேவையான தென்பகுதி உற்பத்திப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளவும் சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்டதாக இந்த நிலையம் உள்ளது.

குறிப்பாக நன்நீர் வசதி, வாகனத் தரிப்பிட வசதி மற்றும் அங்கு சேரும் கழிவுகளை வெளியேற்றக் கூடிய பொறிமுறை என்பவற்றுடன் தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புக்களையும் தடுக்கக் கூடிய செயற்றிட்டம் ஆகியவற்றுடன் இது இயங்கு நிலைக்கு வருவதனை உறுதி செய்யவேண்டும் என்று விவசாயிகளின் சார்பாக வடக்கு மாகாண சபையின் ஆளுநர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மொஹாலியில் 4 மாடி கட்டடம் இடிந்து விழுந்ததில் 2 பேர் பலி

## சிக்கியவர்களை மீட்கும் முயற்சி தீவிரம்

பஞ்சாப் மாநிலம் மொஹாலியில் நேற்று சனிக்கிழமை மாலை 4 மாடி கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்ததில் இமாச்சலப்பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயது பெண் உட்பட இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். பலர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் ஒருவர் தியோக்கைச் சேர்ந்த த்ரிஷ்டி வர்மா என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இடிபாடுகளுக்கு இடையே இருந்து நேற்றிரவு மீட்கப்பட்டு மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டாலும், படுகாயங்கள் காரணமாக அவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், இன்று ஞாயிற்றுக்கிழமை காலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. அவர் பெயர் அபிஷேக் என்றும் ஹரியானா மாநிலம் அம்பாலாவைச் சேர்ந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.



இடிபாடுகளுக்குள் மேலும் பலர் சிக்கியிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது. கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருப்பவர்களை மீட்கும் பணியில், இந்திய இராணுவத்தினரும், தேசிய பேரிடர் மீட்பு படையினரும் 17 மணிநேரங்களுக்கு மேலாக தீவிரமாக முயன்று வருகின்றனர். 60 சதவீத இடிபாடுகள் அகற்றப்பட்டுவிட்டன என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.கட்டட விபத்துக் குறித்து மூத்த பொலிஸ் அதிகாரி தீபக் பரீக் கூறு கையில்,

“முதல்கட்ட விசாரணையில், கட்டடத்தின் உரிமையாளர்கள் எந்த விதமான முன் அனுமதியும் இல்லாமல் அருகில் இருந்த நிலத்தில் குழி தோண்டியுள்ளார். கட்டட உரிமையாளர்களான பர்விந்தர் சிங் மற்றும் ககன்தீப் சிங் இருவர் மீதும் பாரதீய நியாய சன்ஹிதா (பி.என்.எஸ்) பிரிவு 105 இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.” என்று தெரிவித்தார்.

# உள்நாட்டில் மிக நவீனமாக தயாரிக்கப்பட்ட போர்க்கப்பல் கடற்படையிடம் ஒப்படைப்பு

கடற்படை பயன்பாட்டுக்காக ‘பி17ஏ கிளாஸ்’ மற்றும் ‘பி15பி கிளாஸ்’ கப்பல்கள் தயாரிக்க மும்பையில் உள்ள மசகான் டாக்ஸ் ஷிப் பில்டர்ஸ் நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.

இந்த இரு கப்பல்களின் வடிவமைப்பை இந்திய கடற்படையின் போர்க்கப்பல் வடிவமைப்பு பிரிவு உருவாக்கி கொடுத்தது. அதன்படி போர்க்கப்பல் மேற்பார்வை குழு கண்காணிப்பில், உலகத்தரத்துக்கு இணையாக இந்த 2 போர்க்கப்பல்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

நீல்கிரி கப்பல் கடலில் எந்த சூழ்நிலையிலும் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த போர்க்கப்பல் எதிரிநாட்டு ரேடார்களில் சிக்காத வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இதில் நவீன ஆயுதங்கள் மற்றும் சென்சார் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. எதிரி நாட்டு நீர்மூழ்கி கப்பல்கள், போர்க்கப்பல்கள், ஏவுகணைகள், விமானங்கள் நெருங்கி



னால் இதில் உள்ள சென்சார் கருவிகள் உடனடியாக கண்டுபிடித்து எச்சரிக்கை விடுக்கும். அவற்றை தாக்குதவதற்கு தேவையான அனைத்து ஆயுதங்களும் இந்த கப்பலில் உள்ளன. இந்த போர்க்கப்பலுக்கு உதவியாக எந்த துணை போர்க்கப்பல்களும் செல்லத் தேவையில்லை. எங்கும் தனியாக செல்லும் முன்னணி கப்பலாக இது கடற்படையில் இருக்கும்.

சூரத் போர்க்கப்பலில் இருந்து பிரம்மோஸ் மற்றும் பராக்-8 ரக வான் பாதுகாப்பு ஏவுகணைகளை ஏவமுடியும். மேலும், உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கி கப்பல் ஆயுதங்களும், சென்சார்கள் இதில் உள்ளன.

கப்பலின் அடிப் பகுதியில் சோனார் ஹம்சா என்.ஜி, டார்பிடோ ஏவுகணைகளை ஏவும் ட்யூப் லோஞ்சர், ஏ.எஸ்.டபிள்யூ ராக்கெட் லோஞ்சர் ஆகியவை இந்த கப்பலில் உள்ளன.





# காசா வைத்தியசாலைகள், பாடசாலை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 8 பேர் பலி

வடக்கு காசாவிலுள்ள 2 வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலை மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கமால் அத்வான் மற்றும் அல் அவ்தா ஆகிய வைத்தியசாலைகள் மீதே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், காசா மீது இஸ்ரேல் மேற்கொண்டுள்ள தாக்குதல்களில் இதுவரை பலியானவர்களின் எண்ணிக்கை 45,000 ஐ கடந்துள்ளது.

மேலும் 107,573 பேர் காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# செங்கடலில் சொந்த போர் விமானத்தை தவறுதலாக சுட்டு வீழ்த்திய அமெரிக்கா!



செங்கடலில் தனது சொந்த போர் விமானம் ஒன்றை தவறுதலாக சுட்டு வீழ்த்தியதாக அமெரிக்க இராணுவம் கூறியது.

அந்த நாட்டு நேரப்படி இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 03.00 மணியளவில் சுட்டு வீழ்த்தப்பட்ட F/A -18F போர் விமானத்தில் இருந்த இரு விமானிகளும் சிறு காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர் என அமெரிக்க இராணுவம் உறுதிப்படுத்தியது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்க மத்திய கட்டளை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

யேமனின் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்க இராணுவம் வான்வழித் தாக்குதல்களை நடத்தியதால் இந்த சம்பவம் நிகழ்ந்தது.

எனினும், அமெரிக்க இராணுவத்தின் மத்திய கட்டளை அந்த நேரத்தில் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தின் விமானிகள் மேற்கொண்ட பணி என்ன என்பதை விவரிக்கவில்லை.

1200 பேரைக் கொன்று 250 பேரை பயணக் கைதிகளாகக் கைப்பற்றிய இஸ்ரேல் மீதான ஹமாஸின் திடீர் தாக்குதலுக்குப் பின்னர் 2023 ஒக்டோபரில் காசா பகுதியில் இஸ்ரேல்-ஹமாஸ் போர் தொடங்கியதில் இருந்து சுமார் 100 வணிகக் கப்பல்களை ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் ஹவுத்திகள் குறிவைத்துள்ளனர்.

காசாவில் இஸ்ரேலின் தாக்குதலில் 45 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, காசாவில் ஹமாஸுக்கு எதிரான இஸ்ரேலின் போரை நிறுத்துவதற்கு இஸ்ரேல், அமெரிக்கா அல்லது ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றுடன் தொடர்புடைய கப்பல்களை குறிவைப்பதாக ஹவுத்திகள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் ஹவுத்திகளை குறிவைத்து அமெரிக்கா செங்கடல் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தனது வான்வழித் தாக்குதல்களை முடுக்கிவிட்டுள்ளது.

பக்கங்கள் 03

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 22/12/2024

## கனடாவில் மீட்கப்பட்ட 29,000 கஞ்சா செடிகள்

கனடாவின் டர்ஹம் பகுதியில் சுமார் 29,000 கஞ்சா செடிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

டர்ஹம் பகுதியின் கெனிங் டன் பிராந்தியத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்ப 02▶




# சமஷ்டி ஆட்சியை தமிழருக்கு வழங்கினால் இலங்கையை வளர்ப்பதற்கு நாங்கள் தயார்

## கனடாவில் சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

“எங்களை நாங்கள் ஆள்கின்ற ஓர் ஆட்சி முறை தமிழர்களுக்கு வழங்கும் போது, இலங்கை என்ற நாட்டை வளர்ப்ப தற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று ஜனாதிபதி அநுரவிடம் குறிப்பிட் டிருந்தேன்.”

- இவ்வாறு கனடாவுக்கு விஜயம் செய் திருக்கும் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

கனடாவின் ரொன்றோவில் இடம்பெற்ற தமிழ் மக்களுடனான சந்திப்பில் உரையாற் றும்போது அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

# தமிழரசு கட்சிக்கான கிளையை கனடாவில் அமைப்பதற்கு கட்சி யாப்பில் இடமில்லை

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

தமிழரசு கட்சிக்கான கிளையை கனடாவில் அமைப்பதற்கு கட்சி யாப்பில் இடமில்லை என்று நாடா ளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

கனடாவின் ரொன்றோவில் இடம் பெற்ற தமிழ் மக்களுடனான சந்திப் பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் வாங்கும்போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கை தமிழரசுக் கட்சி தனது அரசியல் அமைப்பு விதிகளின் பிர காரம் இலங்கைக்குள் மாத்திரம் இயங்கலாம். வெளிநாடுகளில் இயங்க முடியாது.

அதுதொடர்பில் கட்சி யாப்பில் இதுவரை திருத்தங்கள் கொண்டு வரப்படவில்லை.

ஏற்கனவே, திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அதில் வெளிநாடுகளில் கிளைகள் அமைப்பதற்கான விதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால், எமது கட்சியின் பொதுச்சபையில் அதற்கான அங்கீகாரம் வழங்கப் படவில்லை.

எனவே, கனடாவில் தமிழரசு கட்சியின் கிளையை அமைப்பதற்கான சந்தர்ப்பத்தை நாங்கள் வெகு விரை வில் உங்களுக்கு வழங்குவோம். நீங்கள் நம்பிக்கையுடன் இருங்கள்.

ஆனால், தமிழரசு கட்சியின் வீட்டு சின்னத்தில் நீங்கள் ஒரு தொண்டு நிறுவனத்தை அமைக்கலாம். அதன் மூலம் நீங்கள் மக்களுக்கான உதவி களை மேற்கொள்ளலாம். அதற்கு நீங்கள் கட்சியின் அனுமதியை பெற்றுக்கொள்ள தேவை யில்லை.

ஆனால், தமிழரசு கட்சி தொடர் பான நீதிமன்ற வழக்கு நிறைவடைந்த பின்னர், நாங்களாக தேடிவந்து உங்கள் தொண்டு நிறுவனத்தை கட்சி கிளையாக இணைப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படும்.”- என்றார்.






# படுகொலைச் சம்பவங்கள் ரொறன்ரோவில் அதிகரிப்பு

ரொறன்ரோவில் படுகொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்நிலையில், ஸ்காப்ரோவில் நபர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் ஸ்காப்ரோவின் எங்லிங்டன் மற்றும் மார்க்கம் வீதிகளுக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபரை பொலிஸார் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும், அந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மற்றும் சந்தேக நபர்கள் பற்றிய விபரங்கள் எதுவும் பொலிஸார் வெளியிடவில்லை.

இந்த ஆண்டில் இதுவரையில் 82 படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 42 சம்பவங்கள் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




## கனடாவில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்தின் பின்னர் இந்த கஞ்சா செடிகள் மீட்கப்பட்டுள்ளன.

அண்மையில் இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பொது கஞ்சா செடிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லைஎனதெரிவிக்கப்படுகின்றது.

இந்த கஞ்சா செடிகளுடன் உலர்த்தப்பட்ட ஒரு தொகுதி கஞ்சா செடிகளும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் டர்ஹம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சமஷ்டி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாடாளுமன்ற குழுவின் தலைவர் என்ற வகையில் அண்மையில் எனது தலைமையில் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியை சந்தித்தோம். இதன்போது, முதலாவதாக என்னால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை, நாங்கள் இந்த நாட்டின் ஒரு தேசிய இனம். நாங்களும் உங்களைப்போன்று சம பங்காளர்களாக வாழ்வதற்கு, சமஷ்டி அடிப்படையில், நாங்களே எங்களை ஆள்கின்ற ஒரு அரசியல் தீர்வை எதிர்பார்க்கின்றோம் என்று தெரிவித்திருந்தேன்.

எங்களை நாங்கள் ஆள்கின்ற ஓர் ஆட்சி முறை தமிழர்களுக்கு வழங்கும்போது, இலங்கை என்ற நாட்டை வளர்ப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

எங்களுக்கான நிதி அதிகாரம், நில அதிகாரம், பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டு, இந்த நாட்டுக்குள் ஓர் தீர்வு முயற்சியை நீங்கள் மேற்கொண்டால், அது எங்களை மட்டுமல்ல உங்களையும் உயர்த்தும் என்ற செய்தி ஜனாதிபதியிடம் சொல்லப்பட்டது.

அதற்கு அவர் பதிலளிக்கையில், என்னும் மூன்று ஆண்டுகளுக்குள் புதிய அரசமைப்பை கொண்டுவருவோம். அவ்வாறு கொண்டுவரும்போது நாங்கள் அதுபற்றி பேசுவோம் என்கிறார்.

ஆனால், சமஷ்டி என்பது சிங்கள மக்கள் மத்தியில் அதுவொரு தனி நாடுபோன்று பேசப்படுகிறது. அதே நேரம் ஒற்றை ஆட்சி என்பது தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்துடன் பார்க்கப்படுகிறது.

நாங்கள் இந்த விடையம்பற்றி பேசி புதிய அரசமைப்பில் அதனை கொண்டுவர காத்திருக்கிறோம் என்ற செய்தியை ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.”- என்றார்.



# ட்ரம்பின் சமூக ஊடகப் பதிவுகளுக்கு பதிலளிப்பது அரசாங்கத்தின் பணியல்ல

## நிதி அமைச்சர் டொமினிக் லிபிலான்க் தெரிவிப்பு

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அனைத்து சமூக ஊடகப் பதிவுகளுக்கு பதிலளிப்பது கனடிய அரசாங்கத்தின் பணியல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப்பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சர் டொமினிக் லிபிலான்க் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார். கனடா தொடர்பில் அண்மையில் ட்ரம்ப் பல்வேறு கருத்துக்களை சமூக ஊடகங்களில் பதிவிட்டு வருகின்றார்.

குறிப்பாக அமெரிக்காவின் 51 ஆம் மாநிலமாக கனடாவை மாற்ற வேண்டுமென்ற அர்த்தத்தில் அண்மையில் ட்ரம்ப் பதிவிட்டிருந்தார்.

இந்த நிலையில் அனைத்து பதிவுகளுக்கும் பதிலளிப்பது லிபரல் அரசாங்கத்தின் பணி கிடையாது என அமைச்சர் லிபிலான்க் தெரிவித்துள்ளார்.



# நோயாளர்களின் தனியுரிமையை மீறினாரென மருத்துவப் பணியாளர்கள் மீது குற்றச்சாட்டு

நோயாளர்களின் தனியுரிமையை மீறியதாக மருத்துவ பணியாளர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ பொலிஸார் இந்த குற்றச்சாட்டை சுமத்தி வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

ஒன்றாரியோ மாகாண மருத்துவமனைகளில் பணியாற்றிய மூன்று பணியாளர்கள் மீது இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நபர்கள் தனிப்பட்ட மருத்துவ பாதுகாப்புச் சட்டத்தை மீறியுள்ளனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றாரியோவைச் சேர்ந்த மருத்துவ பணியாளர்கள் மீது இவ்வாறு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.